




# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் கொட்டும் மழையிலும் விடாது நடந்தது!

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம் கொட்டும் மழைக்கும் மத்தியில் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில், தியாக தீபத்தின் உயிர் பிரிந்த நேரமான காலை 10.48 மணிக்கு, மூன்று மாவீரர்களின் தாயும் நாட்டுப் பற்றாளரின் மனைவியுமான திருமதி வேல்முருகன் பொதுச்சுடர் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து, தியாக தீபத்தின் உருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, சம நேரத்தில் நல்லூர் வடக்கு வீதியில் திலீபன் உண்ணா விரதம் இருந்த இடத்திலும் நினைவிடத்திற்கு அருகில் உள்ள திலீபனின் ஆவணக் கண்காட்சிக் கூடத்திலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இரண்டு தூக்குக் காவடிகள் நினைவிடத்திற்கு வந்ததோடு, யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நினைவிடத்திற்கு ஊர்திப் பவனிகள் வந்திருந்தன.

நினைவுச் சுடர் ஏற்றுவதற்கு சுமார் அரை மணி நேரத்திற்கு முன்பாக கடும் மழை பொழிய ஆரம்பித்த போதிலும், மழையையும் பொருட்படுத்தாது நினைவிடத்தில் கூடியிருந்த பொதுமக்கள் மேற்பட்டவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 09 செவ்வாய்க்கிழமை 26.09.2023 கதிர் 79






## யாழ்.பல்கலையில் இன்று தியாக தீபம் நினைவேந்தல்

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரத அறப்போராட்டத்தின் இறுதி நாள் நினைவேந்தல் இன்று பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் மாணவர்களால் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

2 ➤

## வேலணை வங்களாவடியிலும் திலீபனின் நினைவேந்தல்



தியாகி திலீபனின் 36 ஆவது நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள், தீவக நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ் வேலணை வங்களாவடிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் நடைபெற்றன.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, அகவணக்கம் செலுத்தி, மலர்மாலை அணிவித்து பொதுமக்களால் மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

திலீபன் நினைவாக அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு தென்னங்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (01)

## 2024 ஆம் வருட வரவு செலவுத்திட்டம் ஜனாதிபதியின் உரை நவம்பரிலாம்!

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையை நவம்பர் 13 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்த்தவுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21 ஆம் திகதியும் அதன் பின்னர் குழுநிலை விவாதம் அல்லது மூன்றாம் வாசிப்பு நவம்பர் 22 முதல் டிசம்பர் 13 வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசம்பர் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது. (04)

## சீன ஆய்வுக் கப்பலுக்கு இதுவரை அனுமதியை வழங்கவில்லையாம்!

### வெளிவிவகார அமைச்சர்

சீன ஆய்வுக் கப்பலான ஷி யான்-6 ஐ எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கையில் நங்கூரமிட இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## திலீபன் நினைவேந்தலுக்கு திருமலையில் தடைவிதிப்பு

தியாக தீபம் திலீபன் நினைவேந்தலுக்கு தடை விதித்து திருகோணமலை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவு, குளக்கோட்டன் மண்டபம், காந்தி சுற்றுவட்டம் மற்றும் திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திலீபனின் நினைவேந்தல்கள், ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் நடத்துவதைத் தடை செய்து நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகப் பொலிஸாரால் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (04)

## தொடர்ந்து ஆதரவளிக்க உலக வங்கி உறுதியளிப்பு

ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாப்பதற்கான இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜெர்வோஸ் இருவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் பல விடயங்கள் குறித்து இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தியதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வாரம் ஜனாதிபதி

2 ➤


# திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் அதி உன்னதமானது - இரா.சம்பந்தன்

தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரதப் போராடடம் அதி உன்னதமானது, என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக பல்வேறு அகிம்சைப் போராட்டங்கள் இடம்பெற்ற நிலையில் அதில் தியாக தீபம் திலீபனின் அகிம்சைப் போராட்டம் அதி உன்னதமானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

திலீபனின் தியாகத்தை எவரும் கொச்சைப்படுத்த முடியாது என்றும் தமிழர்கள் அனைவரும் கட்சி பேதமின்றி ஓரணியில் நின்று திலீபனை நினைவேந்த வேண்டும் என்றும் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.





# இந்தியாவிற்கே எமது ஆதரவு மிலிந்த மொரகொட தெரிவிப்பு

இந்தியா கனடா விவகாரத்தில் இந்தியாவிற்கே தாம் ஆதரவை வழங்குவோம் என இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

சீக்கிய செயற்பாட்டாளர் கனடாவில் சுட்டுக்கொல்லப்பட்டமையின் பின்னணியில் இந்திய அரசாங்கம் உள்ளதாக கனடா குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

கனடா முன்வைத்த இந்த குற்றச்சாட்டுகளுக்கு இந்தியா வழங்கியுள்ள பதில் உறுதியானது என மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில், பயங்கரவாதம் குறித்து சிறிதளவு கூட சகிப்புத் தன்மையை வெளிப்படுத்தக் கூடாது எனவும் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். (த)



# உலக தற்கொலை தடுப்பு தின வீதி நாடகமும் ஊர்வலமும்

(வி.ரி.சகாதேவராஜா)

உலக தற்கொலை தடுப்பு தினத்தினை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வீதி நாடகம் மற்றும் வீதி ஊர்வலம் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர். இரா முரளீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணர் டொக்டர் ஜ/ராச், வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டொக்டர் மதன் மற்றும் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலையின் கணக்காளர், தாதிய பரிபாலகர், நிர்வாக உத்தியோகத்தர், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலையின் பணிப்பாளர் அவர்களின் தற்கொலைத் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு உரையுடன் நிகழ்வு ஆரம்பமானது. மனநல பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் சராப்டீனின் விழிப்புணர்வு உரையும் இடம்பெற்றது.

வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் ஊழியர்களான விகுலந்திரகுமார், திருமதி. ரி.பாஸ்கரதாஸ், திருமதி. ஆரா.ஜெயானி, எஸா.தேவகுமார், திருமதி ஜெயந்தினி, எஸ்.ஸ்ரீதரன் ஆகியோரால் நிகழ்த்தப்பட்ட வீதி நாடகம் இடம்பெற்றது.

தற்கொலை தடுப்பு தொடர்பான எண்ணக்கருவும் மனச்சோர்வு ஏற்படும் சந்தர்ப்பங்களில் தொடர்பு கொள்ள வேண்டிய அவர்களது வைத்தியசாலையின் தொடர்பு இலக்கம் “1926” பற்றிய விழிப்புணர்வுடன் கூடிய நாடகத்தினை தொடர்ந்து வீதி ஊர்வலம் ஆரம்பமானது.

இந்த ஊர்வலமானது, கல்முனை பிரதான வீதியூடாக சென்று கல்முனை பேரூந்து நிலையத்தில் வீதி நாடகம் நிகழ்த்தப்பட்டு கல்முனை பொலிஸ் வீதி வழியாக வைத்தியசாலையை அடைந்தது.

## தொடர்ந்து ஆதரவளிக்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்ரமசிங்க உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா மற்றும் உலக வங்கி அதிகாரிகளுடன் நியூயோர்க்கில் உள்ள உலக வங்கி தலைமையகத்தில் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, உலக வங்கியின் தலைவர் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், நிலையான வளர்ச்சியை உறுதி செய்யவும் ஆதரவளிப்பதாக உறுதியளித்திருந்தார். (04)

## யாழ்.பல்கலையில் இன்று ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற நினைவேந்தலில், கலைப்பீட நான்காம் வருட மாணவன் தீபன் நினைவுதின உரையினை முன்வைத்திருந்ததோடு, மலரஞ்சலி மற்றும் ஈகைச் சுடர் ஏற்றி மாணவர்களால் நினைவேந்தல் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

நினைவேந்தலில் கலந்து கொண்ட பொது மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் யோ. நெவில்குமார் மற்றும் விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் ச.அபிறஷன் உள்ளிட்டவர்களின் பங்குபற்றலுடன் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (க)

## தியாக தீபம் திலீபனின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி தியாக தீபம் திலீபன் ஐந்தம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் ஆலய வீதியில் நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்தார். மக்களுக்காக அவர் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில், 12 நாட்களில் அவரது உயிர் பிரிந்தது. (01)





உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலய 175 ஆவது ஆண்டு நிறைவு விழா



யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் க.கலியுகன் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும் ஆறுமுக நாவலர் தர்மகர்த்தா சபைத் தலைவருமாகிய பொ.ரவிச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசனும் கலந்து கொண்டனர். நிகழ்வின் ஆரம்பத்தில் பாடசாலையில் அமைந் துள்ள நாவலர் திருவுருவச் சிலை மற்றும் நாவலர் திருக்கோவில் என்பவற்றில் வழிபாடுகள் இடம் பெற்றன.

கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் மற்றும் நாவலர் தருமகர்த்தா சபையினர், பழைய மாணவர்கள் எனப் பலர் விழாவில் கலந்து கொண்டனர். (04)

# பயிற்சிப் பட்டறையும் கல்முனை, மருதமுனை நூலகங்களுக்கு புத்தகங்கள் அன்பளிப்பும்





(ஏ.எஸ்.மௌலானா)

**SERLIN** நூலக உறுப்பினர்கள் மற்றும் நூலகர்களுக்கு **Empowering Libraries with the Power of Research** எனும் கருப்பொருளில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விசேட பயிற்சிப் பட்டறை பல்கைலக்கலக நூலகத்தின் பிரதான கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

நூலகர் எம்.எம்.றிபாயுடீன் தலைமையில் இம்பெற்ற இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கைலக்கலக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக பங்கேற்றிருந்தார்.

இதில் இந்திய பாரதிதாசன் பல்கலைக்கழக நூலக மற்றும் தகவல் அறிவியல் துறைப் பேராசிரியர் டாக்டர் பாலசுப்ரமணி ராஜன் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக நூலகர் ஆர்.மகேஸ்வரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விரிவுரையாற்றியதுடன் பயிற்சிகளையும் வழங்கினர்.

இதன்போது **YM Trust Australia** அமைப்பினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பெறுமதியான புத்தகங்கள் **SERLIN** அமைப்பின் அங்கத்துவ நூலகங்களான கல்முனை மற்றும் மருதமுனை பொது நூலகங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இவற்றை நூலகர்களான ஏ.எல்.எம். முஸ்தாக், எம்.ஏ.சி. ஹரீஸா ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் டபிள்யூ.ஜே.ஜெயராஜ், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்களான எம்.சி.எம்.அஸ்வர், கலாநிதி எம்.எம்.மஷ்ரூபா, ஏ.எம்.நபீஸ், எஸ்.எல்.எம்.சஜீர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.



# நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரியாக யூ.எல்.எம்.சாஜித் பொறுப்பேற்றார்

(மாளிகைக்காடு நிருபர்)

கல்முனை கல்வி வலய, நிந்தவூர் கோட்டக்கல்வி அதிகாரியாக கல்முனை கல்வி வலயத்தின் உடற்கல்வி பாட உதவிக்கல்வி பணிப்பாளர் யூ.எல்.எம்.சாஜித், இன்று நிந்தவூர் கோட்டக்கல்வி பணிமனையில் வைத்து ஓய்வு பெற்று செல்லும் முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி எம். சரிப்தீனிடமிருந்து தமது கடமைகளைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம், வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை. ஹபிபுல்லாஹ், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள் முன்னிலையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை கல்வி வலயத்தின் உடற்கல்வி பாட உதவிக்கல்வி பணிப்பாளராக கடந்த பல வருடங்களாக கடமையாற்றிய இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியான சாஜித்துக்கு, அப்பதவிக்கு மேலதிகமாகவே இந்த கோட்டக்கல்வி அதிகாரி பதவியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அர்ப்பணிப்புடன் கடந்த காலங்களில் சேவையாற்றிய முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி விட்ட இடத்திலிருந்து சிறப்பாக செய்யவேண்டிய பொறுப்பு புதிய கோட்டக்கல்வி அதிகாரி சாஜித்துக்கு இருப்பதாகவும், கடந்த காலங்களில் அவர் திறமையாக செயற்பட்டு வலய மாணவர்களை தேசிய ரீதியாக பிரகாசிக்க செய்ய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அதிகாரி என்றவகையில் அவர் தன்னுடைய கோட்டத்தை முன்மாதிரியான கோட்டமாக உருவாக்க அர்ப்பணிப்புடன் தொடர்ந்தும் செயலாற்றுவார் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் இங்கு ஆசியுரை நிகழ்த்திய கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தனது உரையில் தெரிவித்தார்.

மாலை அணிவித்து அழைத்துவரப்பட்ட முன்னாள், இந்நாள் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கு கல்முனை வலயக்கல்வி அலுவலக உயர் அதிகாரிகள் தமது வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டனர்.




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர் 27, 28, 29
மாலை 4.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை
உலக சுற்றுலா தினம் 2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# இம்ரானை வேறு சிறைக்கு மாற்ற நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை பஞ்சாப் மாகாணத்தில் உள்ள 'அட்டக்' சிறையிலிருந்து பாதுகாப்பு நிறைந்த ராவல்பிண்டி அடியாலா சிறைக்கு மாற்ற இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் நேற்று உத்தர விட்டது.

தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சித் தலைவரும் முன் னாள் பிரதமருமான இம்ரான் கான், பரிசுப் பொருள் ஊழல் வழக்கில் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு கடந்த ஒகஸ்ட் 5 ஆம் திகதி முதல் அட்டக் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு தண்டனை விதித்த நீதிமன்றம், அவரை அடியாலா என்ற சிறையில் அடைக்க வேண்டும் என உத்தரவிட்டிருந்தது. எனினும், இம்ரான் கானை கைது செய்ததும் நீதிமன்ற உத்தரவுக்கு மாறாக அட்டக் என்ற சிறைக்கு கொண்டு சென்று காவல் துறையினர் அடைத்தனர்.

இம்ரான் கானின் சிறைத் தண் டனைக்கு இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றம் ஒகஸ்ட் 29 ஆம் திகதி இடைக்காலத் தடை விதித்தும், தூதரக ரகசிய ஆவணங்கள் வெளி யான வழக்கில் அவர் தொடர்ந்து சிறையில் உள்ளார். அந்த வழக் கில் அவரது நீதிமன்றக் காவலை செப்டெம்பர் 26 ஆம் திகதி வரை நீடித்து சிறப்பு நீதிமன்றம் ஏற் கெனவே உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், இம்ரான் கானை அட்டக் சிறையிலிருந்து முதல் வகுப்பு வசதி கொண்ட அடியாலா சிறைக்கு மாற்ற வேண்டும் என அவரது கட்சி சார்பில் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீது விசாரணை நடத்தி வந்த தலைமை நீதிபதி அமீர் ஃபரூக், இம்ரான் கானை அடியாலா சிறைக்கு மாற்றம் செய்ய உத்தரவிட்டிருக்கிறார். (04)

## உக்ரைன் துறைமுகத்தில் ரஷ்யா மீண்டும் தாக்குதல்



உக்ரைன் தானியங்களை ஏற்றுமதி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அந்த நாட்டுத் துறைமுகம் மீது ரஷ்யா மீண்டும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது.

கருங்கடல் பகுதியில் அமைந்துள்ள ஒடெஸா நகருக்கு அருகிலுள்ள துறைமுகத்தின் மீது ஆளில்லா விமானங்களின் மூலம் குண்டுகள், ஏவுகணைகளை வீசி ரஷ்யா ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தாக்குதல் நடத்தியது. அந்த ஏவுகணைகளையும், ஆளில்லா விமானங்களையும் உக்ரைனின் வான் பாதுகாப்பு ஏவுகணைகள் இடைமறித்து அழித்தன, என்று உக்ரைன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்தாலும், வீசப்பட்ட 12 'கலிபர்' ரக ஏவுகணைகளில் ஒன்றும், இரண்டு பி-800 ஒனிக்ஸ் ரக ஏவுகணைகளும் வான் பாதுகாப்பு ஏவு-கணைகளிடம் சிக்காமல் இலக்குகளைத் தாக்கின. இதில் துறைமுகத்தின் கட்டமைப்புகள் சேதமடைந்தன. ஒரு தானியக் கிடங்கும் நாசமானது. அத்துடன், கைவிடப்பட்ட ஹோட்டல் கட்டடம் ஒன்றும் சேதமடைந்தது என்றும் அதிகாரிகள் கூறினர்.

முன்னதாக, கடந்த 24 மணி நேரத்தில் உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 4 பேர் உயிரிழந்ததாகவும், 13 பேர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் கூறினர்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி படையெடுத்தது. போரின் ஒரு பகுதியாக, கருங்கடல் பகுதியில் போர்க் கப்பல்களை நிறுத்திய ரஷ்யா, அந்தக் கடல் வழியாக உக்ரைன் பொருள் கள் பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு தடை ஏற்படுத்தியது.

இதனால் சர்வதேச அளவில் உணவுப் பொருள் விநியோகம் தடைப்பட்டு, உலக நாடுகளில் உணவுப் பொருள் பற்றாக்குறை நெருக்கடி ஏற்படும் என்று ஐ.நா. குற்றம் சாட்டியது. எனினும், உணவுப் பொருள் பற்றாக்குறைக்கு உக்ரைன் போர் விவகாரத்தில் ரஷ்யா மீது ஐரோப்பிய யூனியனும் அமெரிக்காவும் விதித்துள்ள கடுமையான பொருளாதாரத் தடைகளும் காரணம் என்று ரஷ்யா கூறி வந்தது.

இந்தச் சூழலில், உக்ரைன் தானிய ஏற்றுமதி தொடர்பாக துருக்கி மற்றும் ஐ.நா.வின் பெருமுயற்சியில் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் பல மாதங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இரு நாடு களுக்கும் இடையே கடந்த ஆண்டு ஜூலை மாதம் தானிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் கீழ், உக்ரைன் துறைமுகங்களில் உணவு தானியங்கள் கப்பலில் ஏற்றப்படுவதை துருக்கி, உக்ரைன், ஐ.நா. அதிகாரிகள் மேற்பார்வையிடுவதற்கும் கருங்கடலைக் கடந்து துருக்கி யின் பொஸ்பரஸ் நீரிணை வழியாக செல்லும் தானியக் கப்பல்களை ஐ.நா., ரஷ்யா, உக்ரைன், துருக்கி அதிகாரிகள் அடங்கிய கூட்டுக் குழு கண்காணிப்பதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மேலும், ஒப்பந்த காலம் முழுவதும் துறைமுகங்கள் மீதோ, சரக்குக் கப்பல்கள் மீதோ தாக்குதல் நடத்தாமல் இருக்க ரஷ்யாவும் உக்ரைனும் சம்மதித்தன.

இந்த நிலையில், தானிய ஒப்பந்தம் உருவானபோது வாக்களித்தபடி, தங்களது வேளாண் பொருள்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மேற்கத்திய நாடுகள் அனுமதிக்காததால் அந்த ஒப்பந்த அமலாக்கத்தை நிறுத்தி வைப்பதாக ரஷ்யா கடந்த ஜூலை மாதம் அறிவித்தது. அதனைத் தொடர்ந்து, உக்ரைனின் துறைமுகங்கள் உள்ளிட்ட தானிய ஏற்றுமதிக் கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகிறது. (04)

## இந்தியாவுடனான உறவு முக்கியம்! கனடாவின் பாதுகாப்பு அமைச்சர்

இந்தியாவுடனான உறவு முக்கியமானது என கனடா பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர் தெரிவித்துள்ளார்.

காலிஸ்தான் பயங்கரவாதி நிஜ்ஜார் கொலை தொடர்பான விசாரணை ஒருபக்கம் நடைபெற்றாலும், இந்தியாவுடனான உறவை கனடா தொடரும் என்றும் அவர் கூறினார்.

கனடா தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியின்போது, இந்தியாவுடனான எங்கள் உறவைப் பொருத்தவரை இது சவா லான பிரச்சினையாக இருக்கும் என புரிந்து கொண்டிருக்கிறோம். நிஜ்ஜார் கொலை தொடர்பான விசாரணை ஒருபக்கம் நடந்தா லும் இந்தியாவுடனான உறவைத் தொடர் வோம்.

இந்தோ-பசிபிக் உத்திபோல இந்தியாவு-டனான உறவு கனடாவுக்கு முக்கியமானது. அதேவேளையில், சட்டத்தையும், எங்கள் குடிமக்களையும் பாதுகாக்கும் பொறுப்பு எங் களுக்கு உள்ளது. அதற்காக முழுமையான விசாரணையை நடத்தி உண்மையைக் கண்டறிவோம் என்றார்.

இந்தியாவால் பயங்கரவாதியாக அறி விக்கப்பட்ட காலிஸ்தான் பிரிவினைவாதி நிஜ்ஜார், கனடாவில் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் இந்திய உளவாளிகளுக்குத் தொடர்பிருக்கலாம், என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பகிரங்கமா-கக் குற்றஞ்சாட்டினார். இந்தக் குற்றச்சாட்டை இந்தியா உறுதியாக மறுத்தது.

இந்தியாவுக்கு எதிராக கனடாவில் செயல் படும் பயங்கரவாதிகள் மீது அந்த நாடு கடு மையான நடவடிக்கை மேற்கொள்ள வேண் டும், எனவும் இந்தியா வலியுறுத்தியது. அதி லிருந்தே இந்தியா - கனடா நாடுகளுக்கு இடை யிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. (04)

## லிபியா அணை உடைப்பு 8 அதிகாரிகள் கைதாகினர்



லிபியாவில் புயல் காரணமாக இரு அணை கள் உடைந்து வெள்ள நீரில் சிக்கி ஆயிரக் கணக்கானவர்கள் உயிரிழந்தது தொடர்பாக 8 அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து அந்த நாட்டு சட்டத் துறை உயரதிகாரி அல்-சித்திக் அல்-சூரின் அலு வலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், புயல் காரணமாக டெர்ணா நதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த இரு அணைகள் உடைந்தமை தொடர்பாக, நீர்வளத் துறையைச் சேர்ந்த 8 அதிகாரிகளைக் கைது செய்து விசாரித்து வருகிறோம். அவர்களில் 7 பேர் முன்னாள் அதிகாரிகள் ஆவர். ஒருவர் தற்போது பணி யாற்றி வருகிறார்.

தவறான மேலாண்மை, அலட்சியம், தவறான முடிவுகள் போன்றவற்றால் இந்தப் பேரிடருக்குக் காரணமாக இருந்ததாக அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது, என்றுதெரி விக்கப்பட்டுள்ளது.

வடக்கு ஆபிரிக்க நாடான லிபியா, மத்திய தரைக் கடலையொட்டி அமைந்துள்ளது. அந்தக் கடலில் உருவான டானியல் புயல் கடந்த 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் கிழக்கு லிபியாவைக் கடந்தது. அதன் விளைவாக தொடர்ந்து பெய்த கனமழை காரணமாக, அந்தப் பகுதியில் ஓடும் வாடி டெர்ணா ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதன் விளை வாக, அந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த இரு அணைகள் உடைந்து, வெள்ள நீர் அருகி லுள்ள டெர்ணா நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் பாய்ந்தது.

வாடி டெர்ணா உருவாகும் மலைப் பகுதிக் கும், அது மத்தியதரைக் கடலில் கலக்கும் முகத்துவாரத்துக்கும் இடையே டெர்ணா நகரம் அமைந்துள்ளதால் அணை உடைந்து பாய்ந்து சென்ற வெள்ள நீர் அந்த நகரிலிருந்த வீடுகள், வாகனங்கள் உள்ளிட்ட பொருள் களை அடித்துச் சென்று கடலுக்குள் தள்ளி யது.

இது குறித்து பல்வேறு தரப்பிலும் வெளி யிடப்பட்டுள்ள அதிகாரபூர்வ புள்ளிவிவரங் களின்படி இதில் நான்காயிரத்திலிருந்து பதினோராயிரம் பேர்வரை உயிரிழந்திருக் கலாமென தெரியவருகிறது. (04)


சுற்றுலாப் பணியகம்
வடக்கு மாகாணம்
பெருமையுடன் வழங்கும்
உலக சுற்றுலா தினம் - 2023
வடக்கின் திருவிழா
பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்வுகள்
கைவினைப் பொருட்கள் விற்பனை
உணவு விற்பனை
நீர் விளையாட்டுக்கள்
29.09.2023
காலை 09.00 - இரவு 09.00
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
இடம்: யாழ்பாண கலாசார நிலையம்
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir

# கொரோனாவைவிட கொடூரமான வைரஸ் தாக்கும் எச்சரிக்கிறார் சீன வைராலஜிஸ்ட் ஷி ஸெங்லி

சீனாவின் புகழ்பெற்ற நுண்ணுயிரியல் விஞ்ஞானி ஷி ஸெங்லி, எதிர்காலத்தில், கொரோனாவை விட மிகக் கொடிய வைரஸ் பரவும் அபாயமிருப்பதாக எச்சரித்துள்ளார்.

விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் வைரஸ்கள் பற்றிய ஆய்வின் மூலம் புகழ்பெற்றவர் ஷி ஸெங்லி. ஆங்கில திரைப்படத்தின் பட் வுமன் என்ற பெயரால் இவர் அறியப்படுகிறார். ஒட்டுமொத்த உலகமும், கொரோனாவை விட அதிக அபாயம் நிறைந்த வைரஸை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

வூஹானில் உள்ள நுண்ணுயிரியல் ஆய்வு கூடத்தின், உருவெடுக்கும் தோற்று நோய்கள் மையத்தின் இயக்குநராக இவர் உள்ளார். இவர் கொரோனா தொற்று குறித்து கடந்த 20 ஆண்டுகளாக ஆய்வு செய்து வருகிறார். இவரது குழுவினர் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரையில், 40 வகையான கொரோனா வைரஸ்கள் மனித குலத்தை தாக்கவிருப்பதாகவும், இதில் பாதிக்கும்



மேற்பட்டவை மிகவும் அபாயமானவை என்றும் குறிப்பிட்டுள்ளனர். மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு போன்ற பயங்கர கிருமிகள் தாக்கக் கூடும் என்றும் உலகத்தை இந்த ஆய்வுக் கட்டுரை எச்சரித்துள்ளது.

அதிகரிக்கும் வைரஸ்கள், மக்கள் தொகை, விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய் போன்றவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

ஆனால், இதுபோன்ற ஆய்வுகளுக்காக, வூஹான் ஆய்வுகூடம், மிக மோசமான வைரஸ்களைக் கொண்டு ஆய்வு நடத்துவதாகவும், அமெரிக்கா அடுத்த 10 ஆண்டுகளுக்கு இந்த ஆய்வுகூடத்துக்கான நிதியை நிறுத்திவைக்க வேண்டும் என்றும் அமெரிக்க பெடரல் அமைப்பு தீர்மானம் நிறைவேற்றத் திட்டமிட்டு வருகிறது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (04)

# மோசமான கடலரிப்பால் காவு கொள்ளப்படும் தம்பிலுவில் தம்பையா சுவாமி சமாதி ஆலயம்!

## மண் மூடைகளை அடுக்கி பாதுகாக்க ஏற்பாடு





(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான கடலரிப்பை அடுத்து, தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் காவு கொள்ளப்படும் ஆபத்தை எதிர் நோக்கி இருக்கின்றது .

அந்த பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பில், இதுவரை சுமார் 200 தென்னை மரங்கள் மற்றும் 12 கிணறுகள் இதுவரை கடலரிப்பால் கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த சில நாட்களாக அங்கு இடம் பெறுகின்ற மோசமான கடலரிப்பால் தம்பையா சமாதி ஆலயமும் கடலுக்குள் காவு கொள்ளப்படும் பாரிய அபாயம் நிலவியதை குருகுலப் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் அறிந்து உடனடியாக பிரதேச செயலாளருக்கும், கட-லோர பாதுகாப்பு திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் கே. துளசிதாசனுக்கும் அறிவித்தார் .

மாகாணப் பணிப்பாளர் எந்திரி கே.துளசிதாசன் உடனடியாகச் செயல்பட்டு, 100 மண் மூடைகளை நேற்றைய தினம் அங்கு அடுக்குவதற்கு உத்தரவிட்டார் .

அதன்படி, அங்கு கடலோரப்பாதுகாப்புத்திணைக்களத்தினரும் குருகுல இல்ல மாணவர்களும் சிவதொண்டர் அணியும் அஜந்தன் தலைமையில் சிறப்பாகச் செயற்பட்டு பாதுகாப்பு மண் மூடைகளை அடுக்கினார்கள்.




# அல் - ஹிலால் வித்தியாலயத்தில் மாணவர்கள் சித்திரக் கண்காட்சி





(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய ஏற்பாட்டில் ‘மாணவர்களின் மனதில் தோன்றும் சித்திரங்கள்” எனும் தலைப்பில் பாடசாலை மட்டத்தில் ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு என இரு பிரிவுகளாக நடைபெற்ற சித்திரப் போட்டிகளின் மாணவர் படைப்புக் கண்காட்சி பாடசாலை கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.ஜிஹானா ஆலிப் அவர்களினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.என்.எம்.மலீக், ஸாஹிறா கல்லூரி முன்னாள் அதிபர் ஏ.எல்.ஹம்ஸா, அல்-ஹிலால் வித்தியாலய பிரதி அதிபர்களான நுஸ்ரத் பேகம், ஷெறோன் டில்ராஸ் மற்றும் அல்-ஹிலால் வித்தியாலய முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத், பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்க பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சியின்போது பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி வரையப்பட்ட சித்திரங்கள் மாத்திரமன்றி மாணவர்களினால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

சித்திரப்போட்டி மற்றும் கண்காட்சியை இப்பாடசாலையின் சித்திரப்பாட ஆசிரியைகளான பௌமியா, சூசான், திரோஸா பானு மற்றும் முபீதா ஆகியோர் இணைந்து நெறிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.09.2023இல் வெளியிடப்பெற்றது.